# அரசு செய்தி வெளியீடு

## 6.7.2007

தமிழகத்திலுள்ள வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி, கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி, தேனி அரசு மருத்துவக் கல்லூரி ஆகிய மூன்று மருத்துவக் கல்லூரிகளில் இந்த ஆண்டு 300 மாணவர்கள் சேர்க்கைக்கு இந்திய மருத்துவக் கவுன்சில் தடை விதித்திருந்தது. தற்போது இந்த தடையை நீக்கி மாணவர்கள் சேர்வதற்கு அனுமதி வழங்கி மத்திய அரசு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் அன்புமணி இராமதாஸ் அவர்கள் உத்தரவிட்டுள்ள செய்தி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

********